## உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாய் வைப்பேன். மத் 25 : 21

எந்நாளும் நான் இப்படி "அடிமை வேலைதான்" செய்ய வேண்டுமா ? என அங்கலங்க்கும், என் அன்பு சகோதரனே சகோதரியே, வேதம் சொல்கிறது.

**உன்னை அநேகத்தின் மேல், அதிகாரியாய் வைப்பேன்** –என்பதாக. அல்லேலூயா

ஒருவேளை நீங்கள் உதவி பாஸ்டராக இருக்கலாம் அல்லது அலுவலக பணியிலே உதவியாளராக இருக்கலாம். அல்லது தொழில் துறையிலே அடிமையாக இருக்கலாம்.

**"எதுவாக இருக்கட்டுமே ?"**

**ரோமர் 13 : 1 – 7 வசனங்களைப் படித்துப் பாருங்கள்.**

தேவ ஊழியக்காரர்களுக்கு தேவன் கொடுக்கும் ஆலோசனைகளையே உங்களுக்கும் கொடுக்கிறேன். நீங்கள் எப்படி இருக்க வேண்டும் ?

**முதலாவதாக, மத்தேயு 25 : 21 ன்படி**

உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனாக இருக்க வேண்டும்.

ஏனெனில் **"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்"–என்பதாக. நீதிமொழிகளில் எழுதப்பட்டுள்ளது.**

மோசே எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான்– என வேதத்தில் வாசிக்கிறோம்.

ஆதலால் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**உன் உயர்வுக்கு, உண்மை தேவை.**

**இரண்டாவதாக மத் 24 : 45ன் படி,**

உண்மையும், விவேகமும் இருக்க வேண்டும். நீ எதையும் மிகவேகத்துடன் செய்ய வேண்டும். அந்தந்த வேலையை, அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டும். அதை கருத்தாய் விசாரிக்க வேண்டும்.

**நீதி 31 : 27 கூறுகிறது**

தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். – என்பதாக.

நீ வேலை பார்க்கும் ஸ்தலத்தை, சபையை, சொந்த வீடாக நினைத்துக் கொள்.

நீ கூலிக்காரன் அல்ல ! தேவ ஊழியக்காரன், தேவபிள்ளை – என அறிக்கை செய் உன்னுடைய உண்மையை மற்றவர்கள் பார்க்கட்டும்.

**தேவனைத் துதிக்கட்டும். பரலோகம் மகிழட்டும்.**

**மூன்றாவதாக, லூக்கா 12 : 3ன் படி**

விழித்திருக்கிற ஊழியராய் இருங்கள்.

எப்பொழுதும் எந்த வேலைக்கும் ஆயத்தமாயிருங்கள். முறுமுறுப்பில்லாமல் உற்சாக மனதோடு செய்யுங்கள்.

**நான்காவதாக 2 தீமோ 2:15 ன்படி**

வெட்கப்படாத ஊழியக்காரராயிருங்கள்.

உங்கள் ஸ்தாபனத்தின் நோக்கங்களை வெளிப்படுத்த வெட்கப்படாதேயுங்கள். நீ கை நீட்டி சம்பளம் வாங்கும் ஸ்தலத்தைக் குறித்து அதிருப்தி உனக்குள் இருக்க வேண்டாம். குறை கூறிக்கொண்டே திரியாதே. உண்மையாயிரு அல்லது வெளியேறு

**ஐந்தாவதாக, மல்கியா 1 : 6ன்படி**

எஜமானைக் கனம் பண்ணும் ஊழியக்காரனாயிரு.

உன் தலைவரிடத்தில் ஆயிரம் குறைகள் இருக்கட்டுமே. நீ அவரை கனம் பண்ண தவறாதே. கனம் பண்ணுவதில் முந்திக் கொள்ளுங்கள் என வேதம் சொல்கிறது.

**ஆறாவது, ஏசாயா 65 : 14ன்படி**

மன மகிழ்ச்சியினால் கெம்பீரிக்கும் ஊழியக்காரராயிருங்கள்.

சிரித்த முகத்துடன் வேலை செய்யுங்கள். எரிச்சலின் ஆவி வேண்டாம்! புன்னகையின் ஆவி உங்களுக்குள்ளே வரட்டும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்து பட்சிப்பீர்களேயானால் அழிவீர்கள் என வேதம் சொல்கிறது.

என அன்பு கர்த்தருடைய பிள்ளையே, உமக்கு அது வேண்டாம்

**ஏழாவதாக, நெகே 2 : 20ன் படி**

எழுந்து கட்டும் ஊழியக்காரராக இருங்கள்

உன் ஸ்தாபனத்தின் குறைகளை நீ தான் நிவிர்த்தி செய்ய வேண்டும். குறைவானவைகளை ஒழுங்கு படுத்தவே தேவன் உன்னை அங்கு வைத்திருக்கிறார். குறையை சுட்டிக்காட்டுவதை விட்டுவிடு. அதை நிவிர்த்தி செய்யத்தான் தேவன் என்னை வைத்திருக்கிறார் என வீரமுழுக்கமிடு.

**அப்பொழுது சங்கீதம் 104 : 4ன் படியாக**

தேவன் உன்னை அக்கினி ஜீவாலையாக மாற்றுவார்.

**ஆமோஸ் 3 : 7 ன் படியாக**

ரகசியங்களை உனக்கு வெளிப்படுத்துவார்.

உன்னுடைய தலைவரே உன்னிடத்தில் வந்து ஆலோசனை கேட்பார்கள்

**அப்போஸ் 16 : 17 ன்படியாக**

நீ உன்னதமான தேவனுடைய ஊழியக்காரனாக, பிள்ளையாக காட்சி அளிப்பாய்.

**ஆதலால் மத் 25 : 26 ன் படி**

பொல்லாத, சோம்பலான ஊழியராய் இராதே.

**மத்தேயு 25 : 30 ன் படி**

பிரயோஜனமற்ற ஊழியக்காரராய் இராதே. உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாய் வைப்பேன். ஆமென்.

**மிக, மிக முக்கியமாக லூாக் 12 : 47 ன்படி**

எஜமானின் சித்தப்படி செய்கிற ஊழியக்காரனாயிரு. உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக உனக்கு சம்பளம் தந்து வைக்கவில்லை. ஸ்தாபனத்தின் தரிசனத்தை நிறைவேற்று.

**அப்பொழுது தேவன்**

**உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாய் வைப்பார்,**

**நீ கீழாகாமல் மேலாவாய்**

**கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார்.** ஆமென்.

**பக்தன் பாடுகிறார்**

உண்மை வழி நடந்திடும்,
உத்தமனுக்கென்று கர்த்தர் துணை
கண்கள் அவன் மீது வைத்திடுவார்,
கருத்தாய் காத்திடுவார்

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலைகள் கஷ்டங்கள் நீங்கிடும்
கைவிடா காத்திடும், பரமனின்
கரங்களை நாம் பற்றிக்கொள்வோம்.

இந்த மாதத்தில் மேற்கண்ட பாடலை அடிக்கடி பாடுங்கள்.

**உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாய் வைப்பார்,**